# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## SESSIONS CASE NO. 09/2014

## Deposition of Witness for : PW 37

**Name** : திரு. சேகர்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24-01-2023.**

**முதல் விசாரணை** -

நான் கூடுதல் காவல் துறை கண்காணிப்பாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்று விட்டேன். நான் திருவண்ணாமலை ஊரக உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளராக பணிபுரிந்த போது கடந்த 8.8.2009 ந் தேதி திருவண்ணாலை ஊரக உட்கோட்ட காவல் எல்லைக்குட்பட்ட தானிப்பாடி காவல் நிலைய குற்ற எண் 30/2009 சட்டப்பிரிவுக 302, 328 உ/இ. 41(A) வழக்கை பார்வையிட்டதில் இவ்வழக்கில் புலன் விசாரணை முடிக்கப்பட்டு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளன. எனக்கு முன்பு இருந்த துணை கண்காணிப்பாளர் திரு. சிவகாமி அவர்கள் புலனாய்வு செய்து வைத்திருந்த கோப்பை நான் மேற்கொண்டு புலன் விசாரணை செய்து இவ்வழக்கில் இறந்து போன 5 நபர்களின் பிணக்கூராய்வு அறிக்கை கருத்துறையுடன் வழங்கப்பட்டு இருந்ததை பார்வையிட்டேன். இறந்து போன கோபால் சாமியின் இறப்பிற்கு காரணம் எத்தில் ஆல்கஹால் என்று தெரியவந்தது. எஞ்சிய நால்வரின் இறப்பிற்கு காரணம் ஆர்கனோ பாஸ்பரஸ் என்ற விஷப்பொருள் கலக்கப்பட்டு உள்ளதை பார்வையிட்டேன். கோபால்சாமியின் சடலக்கூராய்வை சென்னை அரசு பொது மருத்துவமனை சட்டம் சார்ந்த பேராசியர் அவர்களிடம் இறுதி கருத்துரை பெற்றேன். அவர் கோபால் சாமியின் இறப்பிற்கு காரணம் மோனோ புரோட்டோபாஸ் பாய்சன் என்று கருத்துரை கூறினார். அது ஏற்கனவே அ.சா.ஆ.29 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் கண்ட அனைத்து சாட்சிகளையும் நான் விசாரித்த போது ஏற்கனவே அ.சா.39 டம் சொன்னது போல் என்னிடம் சொல்லியதால் நான் மறு வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. 13.1.2009 அன்று 20.30 மணிக்கு எதிரி குப்பன் வீட்டில் உள்ள சுமார் 80 லிட்டர் படிக்கக்கூடிய லாரி டியூப் ஒன்றை

கைப்பற்றுதல் மகஜர் மூலம் துணை கண்காணிப்பாளர் அ.சா.36 அவர்களால் கைப்பற்றப்பட்டது. அந்த மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த லாரி டியூபில் இருந்த சாராயத்தை அழிப்பதற்கு இரண்டு வெள்ளை நிற கண்ணாடி பாட்டிலில் 500 மிலி வீதம் எடுக்கப்பட்டு மீதம் உள்ள சாராயத்தை அழிப்பு மகஜராக 20.30 மணிக்கு அ.சா.ஆ.10 முன்னிலைக்கு அழிக்கப்பட்டது. அந்த லாரி டியூப் சா.பொ. 12. மேலும் அன்று இரவி 20.30 மணிக்கு ரவி என்பவர் மறைத்து வைத்திருந்த 75 லிட்டர் கொள்ளவு கொண்ட லாரி டியூபை அ.சா. ஆ.12 முன்னிலைக்கு மகஜர் மூலம் கைப்பற்றி 22.45 மணிக்கு நாட்டு சாராயத்தை மாதிரிக்கு எடுத்துக் கொண்டு மீதம் உள்ள சாரயத்தை கொட்டி அழிக்கப்பட்டது. அந்த லாரி டியூப் சா.பொ. 13. மேலும் இவ்வழக்கில் பிணக்கூராய்வுக்கு உடன் இருந்த காவல் ஆய்வாளரர்கள் அன்பழகன், முதல் நிலைக் காவலர் பொன்முடி, முதல் நிலைக் காவலர் 120 செல்வம், தலைமை காவலர் 472 சேகர் மற்றும் முதல் நிலைக் காவலர் 131 முனுசாமி ஆகியோரை விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலம் பெற்றேன். பின்னர் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை செங்கம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் பெற்று வேலூர் தடய அறிவியல் ஆய்வு கூடத்திற்கு நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவு கடிதம் பெற்று அனுப்பி வைத்த தலைமை எழுத்தர் திரு. குப்பன் அவர்களையும் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். 11.2.2009 ந் தேதி வேலூர் சென்று வேலூர் ரசாயண பரிசோதனைக் கூட ரசாயண உதவியார் திரு. அசோக் குமார் மற்றும் பாரி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். வேலூர் வடக்கு காவல் நிலையம் காவல் திரு. பலுவுல்லா மற்றும் லத்தேரி காவல் நிலைய காவலர் திரு. சாந்தலிங்கம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். வழக்கில் 12.8.2009 ந் தேதி விஷச்சாராயம் அருந்தி இறந்து போன சேட்டு (எ) கோபால், ஜெயராமன், தோலா மற்றும் குப்புபாய் (எ) சோலையம்மாள் ஆகியோரை பிணக்கூராய்வு செய்த தானிப்பாடி அரசு மருத்துவமனை மருத்துவர்கள் டாக்டர் முபின், டாக்டர் சீனுவாசன் மற்றும் திருவண்ணாமலை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவர்கள் டாக்கர் ஸ்ரீலதா மற்றும் மலர்விழி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் இறந்து போன தோலா, குப்புபாய் (எ) சுவாலியம்மாள், கோபால்சாமி ஆகியோர் இறப்பிற்கு முன் மருத்துவமனையில் அனுமதித்து விபத்து பதிவேடுகளை பராமரித்த டாக்டர் குப்புராஜ் அவர்களையும், இறந்து போன சேட்டு (எ) கோபாலை மோத்தக்கல் மயானத்தில் புதைக்கப்பட்டதை தோண்டி எடுத்து பிரேத விசாரணை செய்த தண்டராம்பட்டு வட்டாட்சியர் திரு. ராஜேந்திரன் அவர்களையும் விசாரணை செய்து வாக்குமூலங்கள் பெற்றேன். 11.9.2009ந் தேதி சென்னை சென்று

சென்னை மருத்துவக் கல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவ பேராசியர் இயக்குநர் வள்ளிநாயன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். தடய அறிவியல் ஆய்வகம் சென்னை திருமதி, சோபியா அவர்களையும் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். வழக்கின் புலன் விசாரணை முடிக்கப்பட்டதால் 27.10.2009ந் தேதி இவ்வழக்கு கோப்பினை உதவி இயக்குநர் குற்ற வழக்கு தொடர்பு திருவண்ணாமலை அவர்களிடம் சமர்ப்பித்து மாதிரி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன். 28.10.2009ந் தேதி மாதிரி குற்றப் பத்திரிக்கைக்கு கனம் நீதிபதி அவர்களிடம் ஒப்புதல் பெற்றேன். 30.10.2009ந் தேதி இவ்வழக்கில் எதிரி அ1 செந்தில் (எ) ராமஜெயம் மீது பிரிவு 302, 328 இதச மற்றும் 4(1)(A) ஆக்ட்ன் படியும் எதிரி அ2 மண்ணு மீது பிரிவு 4(1)(AA ) ஆக்ட் படியும், எதிரிகள் அ3 குப்பம், அ.4 ரவி ஆகியோர் மீது 4(1)(AA A) ஆக்ட் படியும், எதிரி அ.5 முருகேன் மீது 4(1)(A) ஆகட் படியும் இறுதி அறிக்கையை நீதித்துறை நடுவர் செங்கம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> -

அ.சா.23 ஐந்து நபர்களின் உடல் உள்ளுறுப்புகளில் மோனா குரோட்டோபாஸ் என்ற விஷப்பொருள் இல்லை என்று அறிக்கை அளித்துள்ளார் என்றால் சரிதான். அயிட்டம் எண்.2ல் பாலிதீன் பையில் மோனோ குரோட்டோபாஸ் இல்லை என்று சான்று அளித்துள்ளார். மேலும் அயிட்டம் எண் 4 பிரிவு 1 ல் 1ம் எதிரியிடம் கைப்பற்றப்பட்ட லுங்கி மற்றும் சட்டையில் எத்தில் அல்கஹால் மற்றும் மோனோ குரோட்டோபாஸ் ஆகியவை இல்லை என்று சான்று வழங்கியுள்ளார். மேலும் 13.3.2009 விடுவி.எண். 295/2009 ன் மூலம் சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு மறு பகுப்பாய்விற்காக அனுப்பப்பட்டது என்றால் சரிதான். சென்னையில் இருந்து 16.3.2009ல் 1865 தபால் எண் மூலம் சரியான முத்திரை இல்லை என்று திருப்பி அனுப்பப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய விசாரணையில் அ.சா.25 உதவி அறிவியர் ஆய்வர் எத்தில் ஆல்ஹால் மற்றும் மோனோ புரோட்டோபாஸ் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. டாக்டர் ஸ்ரீலதா, மலர்விழி, முபின், சீனுவாசன் ஆகியோர் ஆர்கனோ பாஸ்பரஸ் விஷம் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். டாக்டர் வசந்த மூர்த்தி என்னுடைய விசாரணையில் எத்தில் ஆல்கஹால் இருந்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் பலராமன் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் முகமது பலுவுல்லா, சாந்திலிங்கம் ஆகியோர் இவ்வழக்கின் மேல்விசாரணை செய்வதற்காக காவல்

கண்காணிப்பாளர் வழங்கிய உத்தரவினை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. டி.எஸ்.பி. சிவசாமி விசாரணைக்கு பிறகு நான் விசாரணையை பரிசீலனை செய்தேன். மறு வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. நானும், அ.சா.36ம் எதிரிகள் கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் எங்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய்யான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்/- சேகர்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.